# "முஸ்லிம் பெண்கள் வேலைக்குச் செல்வதால் ஏற்படும் குடும்பவியல் தாக்கங்கள்: நிந்தவூர் பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு"

**Supervisor**
*Mr.M.H.M.Nairoos*
*Lecturer (Prob.),*
*Faculty of Islamic studies & Language*

**Researcher**
*Ms.M.B.Zeenath Munawwara*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies & Arabic*
*Arabic Language*

மனிதன் தனது பொருளாதார ரீதியாக தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வேலை செய்து வருமானம் பெற்றுக் கொள்வது இன்றியமையாததாகின்றது. பொருளாதார நெருக்கடி உயர்ந்து போகின்ற இன்றைய கால கட்டங்களில் குடும்ப நிருவாகத்திற்கு கணவனின் ஊதியம் மட்டும் போதாதிருக்கின்றது. இதனால் மனைவியும் வேலைக்குச் சென்று பொருளீட்டுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. குடும்ப சுமையைக் குறைப்பதற்காக வேலைக்குப் போகும் பெண்கள் குடும்பத்திலேயே பல தாக்கங்களை எதிர் கொள்கின்றார்கள். ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் பெண்கள் வேலைக்குச் செல்வதால் அத்தகைய குடும்பங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. அந்தவகையில் இவ்வாய்வானது முஸ்லிம் பெண்கள் வேலைக்குச் செல்வதால் ஏற்படும் குடும்பவியல் தாக்கங்களை ஆராய்வதை பிரதான நோக்கமாகவும், அரச, தனியார், வெளிநாடு போன்றவற்றில் அதிகமாக பெண்கள் வேலைக்குச் செல்வதும், அதற்கு தூண்டுகோலாக அமைந்த காரணிகளை அடையாளம் காண்பதையும் துணை நோக்கங்களாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது அளவுசார், பண்புசார் ஆய்வு என்பதனால் தரவு சேகரிப்பதற்கு முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல், கலந்துரையாடல், வினாக்கொத்து, அவதானம் போன்றனவும் இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுத் தலைப்புடன் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்கள், பிரதேச செயலகத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்படிப் பெறப்பட்ட தரவுகளை வைத்து MS-Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவாக பொருளாதா ரீதியான சவால்கள், பிறரில் தங்கிவாழாமை, பிள்ளைகளின் எதிர்காலம் போன்ற காரணத்திற்காகவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் பெண்கள் வேலைக்குச் சென்ற போதிலும் கூட பொருளாதார பிரச்சினைகளில் இருந்து அவர்களால் விடுபடமுடியவில்லை. அது குடும்பத்தில் உடல், உளவியல் ரீதியான தாக்கம், கணவன் மனைவி விரிசல், பெற்றோர், பிள்ளைகளுக்கிடையில் விரிசல், பிள்ளைகளின் தீய நடத்தைகள் போன்ற பல அதிகமான தாக்கங்களை குடும்பவியலில் ஏற்படுத்தியிருப்பது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இவ்வாய்வின் மூலம் நிந்தவூர் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் பெண்கள் வேலைக்குச் செல்வதால் ஏற்படும் தாக்கங்களை உணரச்செய்வதற்கும், குடும்பவியலில் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் இது சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு இது தொடர்பான பல ஆலோசனைகள் பெறவும் இவ்வாய்வு பயனுள்ளதாக அமையும்.

***Key Words:*** முஸ்லிம் பெண்கள், வேலைக்குச் செல்லுதல்,குடும்பம், தாக்கங்கள்